IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: OS.188/2024
DEPOSITION OF WITNESS: PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | கே. பட்டாபிராமன் | Caste/ஜாதி | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | சேஷரத்தினம் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | தாழம்பள்ளம் | Religion/ சமயம் | : | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி | Age/வயது | : | |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 13th day of August 2024.

**முதல் விசாரணை**

நான் தாழம்பள்ளம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 06.06.2019 தேதியிட்ட வாதி பெயருக்கு பிரதிவாதிகள் சேர்ந்து எழுதிக்கொடுத்த ரூ.7,00,000/-க்கான புரோ நோட் வா.சா.ஆ.1 ஆகும்.
2. 23.03.2022 தேதியிட்ட வாதி வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ. 2 ஆகும்.
3. 1-ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 ஆகும்.
4. 2-ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.